## JUDICIAL MAGISTRATE COURT NO.II CHENGALPATTU

## CC No. 294/2023

## DEPOSITION OF WITNESS
## (Chapter XXIII Code of Criminal Procedure)

*****

| | |
|---|---|
| IN THE COURT OF | : JUDICIAL MAGISTRATE NO.II CHENGALPATTU. |
| Deposition of witness for | : LW-1/PW-1 |
| Name | : ராஜா |
| Father/Husband's Name | : கோவிந்தராஜ் |
| Village | : திருத்துறைப்பூண்டி |
| Taluk | : |
| Caste | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : 42 |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 13.06.2024.

**முதல் விசாரணை–**

நான் தற்போது லாரி டிரைவராக வேலை செய்கிறேன். இந்த விபத்தில் இறந்து போனவர் எனது அப்பா கோவிந்தராஜ். கடந்த 25.09.2015 ஆம் தேதி மறைமலைநகரில் சாப்பிட்டு விட்டு , இரவு நேரத்தில் சாலையைக் கடக்கும் போது, மேற்கிலிருந்து கிழக்கு நோக்கி வந்த இருசக்கர வாகனம் எனது அப்பாவின் மீது மோதி, விபத்து ஏற்பட்டதாக போன் மூலமாக தகவல் அறிந்து , செங்கல்பட்டு அரசு மருத்துவமனைக்கு வந்து பார்த்தபோது , எனது அப்பாவிற்கு முகத்தில் அடிப்பட்டு சிகிச்சை அளிக்கப்பட்டு கொண்டிருந்தது. பிறகு சிகிச்சைப் பலனின்றி எனது அப்பா இறந்து விட்டார்.

மேற்படி விபத்து குறித்து நான் , மறைமலைநகர் காவல் நிலையத்தில் புகார் அளித்தேன். என்னிடம் காட்டப்படும் புகாரானது நான் கொடுத்ததுதான்.

அதிலுள்ள கையொப்பம் என்னுடையதுதான். மேற்படி புகாரானது அ.த.சா.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது. போலிசார் என்னை விசாரணை செய்தன்ர்.

**குறுக்கு விசாரணை**

அ.த.சா.1 புகாரினை நான் சொல்ல போலீசார் எழுதினார். புகாரினைப் பெற்றபிறகு , என் அப்பாவின் உடலின்மீது பிரேத பரிசோதனை செய்யப்பட்டது. நான் கொடுத்த புகாரில் எனக்கு யார் தகவல் தெரிவித்தார் என்ற விவரத்தைப் பற்றி புகாரில் ஏதேனும் சொல்லியுள்ளேனா என்றால் இல்லை. எனக்கு தகவல் தெரிவித்த நபரின் கைப்பேசி எண்ணினை புகாரிலோ , போலிஸ் விசாரணையின்போதோ சொல்லியுள்ளேனா என்றால் இல்லை. எனக்கு தகவல் தெரிவித்த நபர் மறைமலைநகர் பொதுமக்களில் ஒருவர் என்று நான் தெரிந்து கொண்டேன்.

sd/-xx

Typewritten to my dictation in open court read over to the witness in Tamil in the presence of the accused and admitted by the witness to be correct.

Sd/-R.D. Aarthi,
Judicial Magistrate No.II,
Chengalpattu.

**JUDICIAL MAGISTRATE COURT NO.II CHENGALPATTU**

**CC No. 294/2023**

**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
*****

| | |
|---|---|
| IN THE COURT OF | : JUDICIAL MAGISTRATE NO.II CHENGALPATTU. |
| Deposition of witness for | : LW-8/PW-2 |
| Name | : சீனிவாசன் |
| Father/~~Husband's~~ Name | : கோவிந்தசாமி |
| Village | : கரும்பூர் |
| Taluk | : |
| Caste | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : 46 |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 13.06.2024.

**முதல் விசாரணை—**

நான் தற்போது எலக்ட்ரீஷியனாக வேலை செய்கிறேன். 2015 ஆம் வருடம் தேதி, மாதம் எனக்கு ஞாபகம் இல்லை. நானும் கோவிந்தசாமியும் , தாம்பரம் செல்வதற்காக மறைமலைநகர் பஸ் ஸ்டாப்பில் காலை சுமார் 11 மணியளவில் நின்றுகொண்டிருந்தபோது போலீசார் அங்கு வந்து விசாரணை செய்து கொண்டிருந்தார்கள். எந்த சம்பவம் குறித்து விசாரணை செய்தார்கள் என்று எனக்கு தெரியாது. என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரிலுள்ள முதல் கையொப்பம் என்னுடையதுதான். அந்த கையொப்பமானது அ.த.சா. 2 ஆக குறியீடு செய்யப்படுகிறது. ஆனால் அதிலுள்ள விவரங்கள் எதுவும் எனக்கு தெரியாது. போலீசார் என்னை விசாரணை செய்யவில்லை.

**இந்த சாட்சியை பிறழ்சாட்சியாக பாவித்து குறுக்கு விசாரணை செய்ய அரசு தரப்பில் அனுமதி கோரி அனுமதி அளிக்கப்பட்டது.**

கடந்த 26.09.2015 ஆம் தேதி காலை சுமார் 11 மணிக்கு மறைமலைநகர் பஸ் ஸ்டாப்பில் நானும், கோவிந்தசாமியும் நின்று கொண்டிருந்தபோது முன்தினம் இரவு மேற்படி இடத்தில் நடந்த விபத்து சம்பந்தமாக மறைமலைநகர் போலீசார் சம்பவ இடத்திற்கு வந்து , சம்பவ இடத்தை பார்வையிட்டு மாதிரி வரைபடம் வரைந்தார்கள் என்றும், பார்வை மகஜர் தயாரித்தார் என்றும், அதற்கு சாட்சிகளாாக மேற்படி நாங்கள் இருவரும் கையொப்பம் செய்தோம் என்று, போலிஸ் விசாரணையின்போது சொல்லிவிட்டு தற்போது உண்மைக்கு புறம்பாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**குறுக்கு விசாணை இல்லை**

sd/–xx

Typewritten to my dictation in open court read over to the witness in Tamil in the presence of the accused and admitted by the witness to be correct.

Sd/-R.D. Aarthi,
Judicial Magistrate No.II,
Chengalpattu.